# *22*

# அப்போஸ்தலிக்க வரலாறு

## *அல்லது, சபை தோற்றுவிக்கப்படுதலும் அதன் விரிவாக்கமும், கி.பி. 30-100*[1]

### அறிமுகம்.

***1. அப்போஸ்தலிக்க வரலாற்றின் ஆதார மூலம்.***—இவைகள் பின்வருபவைகளாக உள்ளன,—

*அ. நடபடிகளின் புத்தகம்.*—இதன் எழுத்தாளர் மூன்றாவது சுவிசேஷத்தை(யும்) எழுதியிருந்தார் (இ.வ. அப். 1:1; லூக். 1:1-4). இவர் பவுலுக்குப் பயணத் துணையாளராய் இருந்தார். அப். 16:10; 20:6 மற்றும் பிற "நாங்கள்" வசனப்பகுதிகளைக் காணவும். லூக்கா பவுலின் உடன் ஊழியக்காரர்களில் ஒருவராயிருந்தார் என்பதை பவுலின் நிருபங்களிலிருந்து நாம் அறிகின்றோம் (கொலோ. 4:14; 2 தீமோ. 4:11; பிலே. 23, 24) மற்றும் சீரான பாரம்பரிய வரலாறுகளும் (நடபடிகள் என்ற) இப்புத்தகத்தை லூக்காதான் எழுதினார் என்பதைக் குறிப்பிடுகின்றன. அப்போஸ்தருடைய நடபடிகள் (The Acts of the Apostles) என்ற இதன் தலைப்புப் பெயரானது மூல நூலின் பாகமாய் இருப்பதில்லை, மற்றும் இத்தலைப்பு தவறாக (நம்மை) வழிநடத்துவதாக உள்ளது. இப்புத்தகமானது அப்போஸ்தலர்களில் சிலருடைய மிகச் சில நடவடிக்கைகளையே எடுத்துரைக்கின்றது. மிகப் பழைய கையெழுத்துப் பிரதிகளில் ஒன்று இதற்கு அப்போஸ்தலருடைய நடபடிகள் (Acts of Apostles) என்ற மிகச் சிறந்த தலைப்பைக் கொடுக்கின்றது.

*ஆ. நிருபங்களில் வரலாற்று ரீதியான மறைமுகக் குறிப்புகள்.*—மொத்தம் எழுதப்பட்ட இருபத்தியோரு நிருபங்களில் பதிமூன்று நிருபங்கள் பவுலின் எழுதுகோலில் இருந்து வந்தவையாகும்.

*இ. வெளிப்படுத்தின விசேஷம்.*—இந்தப் புத்தகமானது அப்போஸ்தலரான யோவானின் வாழ்வின் நிகழ்ச்சிகளை பிற அப்போஸ்தலர்கள் (யாவரும்) மரித்து நீண்ட நாட்களுக்குப் பிறகு தருகின்றது.

***2. சுவிசேஷ வரலாற்றுடன் உறவுமுறை.***—*(1)* சுவிசேஷங்கள் முழுவதிலும் யோவான் (ஸ்நானான்), இயேசு, பன்னிருவர், எழுபது பேர் ஆகியோர் இராஜ்யம் சமீபித்திருந்ததாகவே பிரசங்கிக்கின்றனர். நடபடிகளில் நாம் கிறிஸ்து ஆளுகை செய்வதையும், ஆண்களும் பெண்களும் அவரது சபை அல்லது இராஜ்யத்தில் பிரவேசிப்பதையும் காண்கின்றோம்.

*(2)* சுவிசேஷங்கள் முழுவதிலும் செய்தியும் களமும் எல்லைக்கு

உட்படுத்தப்பட்டிருந்தன. இயேசுவின் மரணம், உயிர்த்தெழுதல் அல்லது மேசியாத்துவம் ஆகியவற்றைப் பிரசங்கிக்கவோ அல்லது அவருடைய நாமத்தில் பாவமன்னிப்பைப் பிரசங்கிக்கவோ அல்லது பாலஸ்தீனத்திற்கு அப்பால் செல்லவோ அப்போஸ்தலர்கள் அனுமதிக்கப்படாதிருந்தனர். நடபடிகளில் நாம் இவர்களை எல்லா நாடுகளிலும் கிறிஸ்துவை அவருடைய மீட்பின் ஊழியத்தினுடைய முழு நிறைவில் பிரசங்கிக்கின்றவர்களாகவும், அவருடைய நாமத்தில் பாவமன்னிப்பு அளிக்கின்றவர்களாகவும் காண்கின்றோம்.

*(3)* சுவிசேஷங்களில் கிறிஸ்து தமது பரத்துக்கேறுதல் மற்றும் மகிமையடைதல் ஆகியவற்றின் விளைவாகப் பரிசுத்த ஆவியை வாக்குத்தத்தம் பண்ணுகின்றார். நடபடிகளில் நாம், ஆவியானவர் ஒளியூட்டும் மற்றும் பரிசுத்தப்படுத்தும் வல்லமையுடன் வருவதையும், ஆவியானவரின் பட்டயத்தினால் ஆயிரக்கணக்கானோர் தாக்கப்படுவதையும் காண்கின்றோம். நடபடிகளின் புத்தகம், "பரிசுத்த ஆவியானவரின் சுவிசேஷம்" என்று தக்க வகையிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது.

***3. அப்போஸ்தலிக்க வரலாற்றின் கால கட்டங்கள்.***—தற்பொழுது நாம் நடபடிகளின் புத்தகத்தில் மட்டும் படித்துணர்ந்து வரலாற்றைப் பின்வரும் கால கட்டங்களாகப் பிரிக்கின்றோம்:

*(1)* எருசலேமில் சபை தோற்றுவிக்கப்படுதலும் வளர்ச்சியும் *(கி.பி. 30-35).*[2]

*(2)* யூதேயா. சமாரியாவில் சபையின் விரிவாக்கம் மற்றும் புறஜாதியார் மாற்றப்படுதல் *(கி.பி. 35-45).*

*(3)* புறஜாதியார் மத்தியில் பவுலின் ஊழியப் பயணங்கள் *(கி.பி. 45-48).*

*(4)* பவுலின் நான்காண்டு சிறைவாசம் *(கி.பி. 58-63).*

---

குறிப்புகள்

[1]சபையின் ஸ்தாபனத்திற்கான ஒரு மாற்றுத் தேதி கி.பி. 33 என்றுள்ளது. [2]Ibid.